# செங்கல்பட்டு நகராட்சி

## சாதாரணக் கூட்டம்

**2018ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31ம் தேதி முற்பகல் 10.30 மணியளவில் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன்னிலையில் நடைபெற்ற சாதாரணக் கூட்டம்.**

----

பொருள்–1

நகராட்சி ஆணையர் அவர்களின் அக்டேபர் – 2018 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் – 2

நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர் – 2018 ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

பொருள் – 3

இந் நகராட்சியின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை நமது நகராட்சியிலேயே “PYROLYSIS PLANT “ அமைக்க புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் நமது குப்பை கிடங்கில் அமைக்க நகர மன்ற தீர்மானம் எண். 578 நாள் 10.9.2018ம் தேதிய அனுமதியின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 16.10.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் விவரம் | மதிப்பீட்டு தொகை | வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | Enviro Energy<br>No.1-772A, Thatchan Thottam,<br>Palavanji Palayam, Dharapuram Road,<br>Tirupur – 641 605 | Rs.43.77 lakhs | D.D,No.167687 dt.9/10/2018 Rs.10,000/- C.U.Bank |
| 2 | Hydro Tech System,<br>Sivakasi | தொழில் நுட்ப தகுதி இல்லை விலைப்பட்டியல் பிரிக்கப்படவில்லை | D.D,No.208330 dt.17/10/2018 Rs.10,000/- Bank of Baroda |

மேற்கண்ட 2 ஒப்பந்தபுள்ளிகளி. வ.எண்.1ல் உள்ள Enviro Energy நிறுவனத்தில் தொழில்நுட்ப தகுதி மேற்கண்ட நிறுவனமே முழு முதலீடு செய்ய உள்ளதாலும் அதனை ஏற்று அன்னாருக்கு பணி உத்திரவு வழங்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) மேற்கண்ட பணிகளை நிபந்தனைகள் பின்வருமாறு

அ)ரூ.43.77 இலட்ச மதிப்பீட்டில் நகராட்சியின் பணபங்களிப்பு தேவையில்லை.

ஆ)85,000 ச.அடி இடத்தில் 4000 ச.அடி இடம் தற்போது ஒதுக்கீடு செய்து Biomining செய்த பின்னர் மேற்கண்ட திட்டத்தின் தேவைக்கேற்ப இடஒதுக்கீடு செய்யவும் அனுமதி.

இ)மேற்கண்ட நிறுவனம் தற்போது 3 வருடங்களுக்கு O & M செய்யவும் பின்னர் அதை மன்ற அனுமதிக்கு உட்பட்டு நீட்டித்துக் கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் – 4**

செங்கல்பட்டு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 3 எண்ணிக்கை யிலான Light Commercial Vehicle வாங்கும் பணிக்கு 6.9.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தால் மறு ஒப்பந்தபுள்ளி 6.10.2018 அன்று நடைபெற்றது பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி 3 எண்ணிக்கையில் Light Commercial Vehicle வாங்கும் பணி. | ரூ.16.80 லட்சம் | ABT Industries 0.01 % less |
| | | | செந்தில்குமார், கோயம்பத்தூர், ஒப்பந்தபுள்ளி விதிகளை நிறைவு செய்யாததால் ஒப்பந்தபுள்ளி பரிசிலனைக்கு ஏற்கப்படவில்லை |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 5**

செங்கல்பட்டு நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 10 எண்ணிக்கை யிலான Battery Operated Vehicle வாங்கும் பணிக்கு 6.9.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் தொழில்நுட்ப தகுதி இல்லாத காரணத்தால் மறு ஒப்பந்தபுள்ளி 16.10.2018 அன்று நடைபெற்றது பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சி 10 எண்ணிக்கையில் Battery Operated Vehicle வாங்கும் பணி. | ரூ.18.00 லட்சம் | Encon Engineers 0.11 % less |
| | | | Priyaro Industries 1.10 % more |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இப் பணிக்கான செலவினத்தை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 6

செங்கல்பட்டு நகராட்சி குடிநீர் லாாி வண்டி எண். டி.எண்.19 எப். 1668 தகுதி சான்றை புதுப்பிக்க வேண்டியுள்ளதால் அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.1,45,000/–ஆகும். குடிநிர் அவசர அவசியம் கருதி பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 7

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட ரேடியோமலை மற்றும் முனிசிபல் காலணி பகுதியில் உள்ள நம்ம டாய்லெட் யூனிட் ஐ அப்புறப்படுத்தும் பணியினை மேற்கொள்ள அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு 19.9.2018 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கட்பட்ட ரேடியோமலை மற்றும் முனிசிபல் காலணி பகுதியில் உள்ள நம்ம நாய்லெட் யூனிட் ஐ அப்புறப்படுத்தும் பணி , | ரூ.0.66 லட்சம் | திரு எ. மோகன் | 0.06 சதவீதம் குறைவு |
| | | | திரு கே. வெங்கடேசலு | 1.19 சதவீதம் அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு எ. மோகன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம் (நக.எண்.1945/2018/இ1)

பொருள் – 8

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட ரேடியோ மலை பகுதியில் On Site Composting அமைப்பதற்கு Gravel Sand சப்ளை செய்து Leval பணி மேற்கொள்ள ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு 9.9.2018ல் ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கம் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட நேடியோ மலை பகுதியில் On Site Composting அமைப்பதற்கு Gravel Sand சப்ளை செய்து Leval பணி மேற்கொள்ளுதல் | ரூ.0.32 லட்சம் | திரு வீரபாண்டியன் | 0.08 சதவீதம் குறைவு |
| | | | திரு மோகன் | 13.93 சதவீதம் அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு வீரபாண்டியன் அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1965/2018/இ1)

பொருள் – 9

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மேலமையூர் ஏரி, குண்டூர் ஏரி, கொளவாய் ஏரி இவற்றின் உபரி மழைநீர் வெளியேறும் கால்வாய்களை தூர் வருவதற்கு தோராய செலவினம் ரூ.2.00 இலட்சம் ஆகும். வரும் பருவமழை முன்னெச்சரிக்கையின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு 19.9.2018ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மழைநீர் வடிகால்வாய் மேலமையூர் ஏரி, குண்டூர் ஏரி, கொளவாய் ஏரி இவற்றின் உபரி மழைநீர் வெளியேறும் கால்வாய்கள் தூர் வருவதற்கம் பருவமழை முன் எச்சரிக்கையாக செய்யும் பணி. | ரூ.2.00 லட்சம் | திரு கோபி | 0.16 சதவீதம் குறைவு |
| | | | திரு வெங்கடேசலு | 7.46 சதவீதம் அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு பி. கோபி அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1965/2018/இ1)

**பொருள் – 10**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஜெ.சி.கே. நகர் முதல் களத்துமேடு வரை உள்ள மழைநீர் வடிகால்வாய்யை போக்லைன் இயந்திரம் கொண்டு தூர் வருவதற்கு தோராய செலவினம் ரூ.**1.00** இலட்சம் ஆகும். வரும் பருவமழை முன்னெச்சரிக்கையின் அவசரம் அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு **19.9.2018**ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண். | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஜெ.சி.கே. நகர் முதல் களத்துமேடு வரை மழைநீர் வடிகால்வாய் போக்லைன் இயந்திரம் கொண்டு தூர் வாரும் பணி. | ரூ.1.00 லட்சம் | திரு கோபி | 0.00 சதவீதம் குறைவு |
| | | | திரு வெங்கடேசலு | 0.23 சதவீதம் அதிகம் |

மேற்படி வரப்பெற்றுள்ள இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு பி. கோபி அவர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம். (ந.க.எண்.1965/2018/இ1)

**பொருள் – 11**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.4 பாசித் தெரு நீர்த் தேக்க தொட்டிக்கு பழவேலி நீரேற்று நிலையத்தில் இருந்து களத்தூரான் கால்வாய் வழியாக நீஞ்சல் மடுவின் உள்ளே சென்று அடைகிறது. அங்குள்ள குழாய்களை **250**ஆ நீளத்திற்கு மாற்றியமைக்க **12.9.2018** அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டத்தில் யாரும் பங்கேற்காததால் மறு ஒப்பந்தபுள்ளி **20.9.2018** அன்று கோரப்பட்டது வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் விவரம்

| வ.எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் விழுக்காடு |
|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சியின் பாசித் தெரு நீர்தேக்க தொட்டியின் பிரதான குடிநீர் குழாய் கசிவு பைப்பை களத்தூரான் கால்வாய் நீஞ்சல் மடுவு அருகே மாற்றி அமைக்கும் பணி. | திரு கே. ராஜகோபாலன், 4.76 சதவீதம் அதிகம். |
| 2 | | திருவா. அப்பல்லோ எண்டர்பிரைசஸ் 6.09 சதவீதம் அதிகம். |

மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 12**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட அழகேசன் நகர் மற்றும் அண்ணா நகர், Onsite Composting Centre அருகில் பசுமை பூங்கா அமைக்கவும், ஜீவானந்தம் தெரு, வேதாசலம் நகர், பெரியமணியக்கார தெரு அலுவலக OCC ஆகிய இடங்களில் பசுமை உரத்தை கொண்டு தோட்டம் அமைக்கவும் அதனை சுற்றி Green fencing Barbed wire fencing அமைக்க மதிப்பீடு ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 13**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வெள்ள பாதிப்பு இடங்களை ( Vulnerable Areas ) நேராய்வு செய்ததில் செங்கல்பட்டு வருவாய் கோட்ட அலுவலர், மற்றும் செங்கல்பட்டு நகராட்சி ஆணையர் அறிவுரைப்படி மேலமையூர் ஏரியின் உபரி நீர் மற்றும் மழைநீர் வெளியேர ஜெ.பி. உணவகம் அருகில் அண்ணா நகர் மற்றும் திம்மராஜகுளம் பகுதியை இணைக்க மதிப்பீடு ரூ.2.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு—

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 14**

செங்கல்பட்டு நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தினசரி குப்பைகள் அல்ல பயன்படும் டம்பர் பிளேசர் வண்டி எண். டி.என். 21 எ.ஒய். 8890 பழுத பார்த்து தகுதி சான்று பெற (எப்.சி) தோராய தொகை ரூ.1.50 இலட்சத்தில் பணியினை மேற்கொள்ள தனி அலுவலர்

அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டதின் பெயரில் 24.9.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டுள்ள 2 ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளி | வைப்புத் தொகை | பவடிம் தொகை |
|---|---|---|---|---|
| 1 | Madras Form Equipments. Maduranthagam | ரூ.1.70 லட்சம் | ரூ.1750/– | ரூ.336/– |
| 2 | Kaveri Implements, Chengalpattu. | ரூ.1,49,672/– | ரூ.1750/– | ரூ.336/– |

மேற்கண்ட 2 ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண்.2ல் கண்டுள்ள Kaveri Implements, நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளி குறைவாக இருப்பதால் இதனை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசியநிமித்தம் மன்ற ஒ.புதல் எதிா நோக்கி தனி அலுவலா் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் பின்னேற்ப்பு வழங்கலாம்.

பொருள் – 15

செங்கல்பட்டு நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் பயன்படுத்தப்படும் பல்வேறு பதிவேடுகள் மற்றும் 1920ம் ஆண்டு முதல் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பாதுகாக்கப்பட்டு வருகிறது. பதிவேடுகளை தீ விபத்துகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ள தீயணைக்கும் சாதனம் வாங்க நகர மன்ற தீர்மானம் எண். 536 நாள் 31.7.2018ல் மன்ற அனுமதி பெறப்பட்டதின்படி வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | நிறுவனம் கொடுத்துள்ள தொகை |
|---|---|---|
| 1 | Saratha Fire. Chengalpattu | ரூ.11,564/– |
| 2 | Kottes Fire Protection. Chengalpattu | ரூ.12,980/– |
| 3 | Global fire Protection, Chengalpattu | ரூ.9,912/– |

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) வரப்பெற்ற விலைப்புள்ளியில் வ.எண். 3ல் உள்ள Global fire Protection நிறுவனத்திற்கு உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 16

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–5 அவர்களின் 3.9.2018ம் தேதியிட்ட கடித ந.க.எண்.7366/2016/யுபிஎ2 கடிதத்தின்படி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 அத்தியாயம் 14 பிரிவு 306 மற்றும் அதன் உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரிரங்களின் படியும் அவற்றிற்கு ஏற்படுத்தும் திருத்தங்களுக்கு உட்பட்டும் மற்றும் சாலையோர விற்பபனயினை ஒழுங்குபடுத்தவும் செங்கல்பட்டு நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுங்குமுறை) துணை விதிகள் 2018ஐ எற்படுத்தி அதன்படி விற்பனை கட்டணங்கள் மற்றும் பராமரிப்பு கட்டணங்களை நிர்ணயம் செய்து உபவிதிகளாக கொண்டு வந்து நடைமுறைபடுத்த மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

மேலும் இதனை தொடர்ந்து பத்திரிகை விளம்பரம் செய்யவும் பொது மக்களின் ஆட்சேபனை மற்றும் கருத்துகளை பெறவும் இதனை தொடர்ந்து மன்றத்ன் இறுதி ஒப்புதல் பெற்று அதனை மாவட்ட அரசிதழில் உபவிதிகள் 2018 என வெளியிடவும் மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) இதற்கான அனைத்து செலவினங்களுக்கும் (பத்திரிகை விளம்பரம் உள்பட) தோராய தொகை ரூ.1.00 லட்சத்திற்க அனுமதி வழங்கலாம்.

பொருள் – 17

செங்கல்பட்டு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் சுகாதாரம் மற்றும் திடக்கழிவுகள் கையாள்வது குறித்தான கணக்கெடுப்பு பணியினை மேற்கொள்ள Register Society மூலம் பரப்புரையாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர் SBM பணியாளர்களுக்கு 9/2018 மாதம் முதல் 3 மாதங்களுக்கான சம்பளம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் அவர்களின் கடிதம் ந.க.எண். 2224/2017/பி1 நாள் 28.9.2018ம் தேதிய உத்திரவின்படி வருவாய் நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள தோராய செலவினம் ரூ.6,00,000/– லட்சத்திற்கு அனுமதிப் பெறப்பட்டு ஊதியம் வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம். (ந.க.எண்.1537/2017/எச்1)

பொருள் – 18

செங்கல்பட்டு நகராட்சியில் 2018–19ம் நிதியாண்டில் குடிநீர் நிதியில் இருந்து பின் வரும் பணிகள் செய்ய 15.10.2018 அன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரியதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்புநோக்கு தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாமண்டூர் நீரேற்று நிலையத்தில் நீர்தேக்க தொட்டி அருகே 162.5 கே.வி ஜெனரேட்டர் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்து மீண்டும் பொருத்தி இயக்கி காண்பிக்கும் பணி. | ரூ.0.60 லட்சம் | திரு கே. ராஜகோபாலன் | 0.16 சதவீதம் குறைவு |
| | | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 1.47 சதவீதம் அதிகம். |
| 2 | பழவேலி நீரேற்று நிலையத்தில் நீர்தேக்க தொட்டி அருகே 162.5 கே.வி ஜெனரேட்டர் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்து மீண்டும் பொருத்தி இயக்கி காண்பிக்கும் பணி. | ரூ.1.25 லட்சம் | திரு கே. ராஜகோபாலன் | 1.68 சதவீதம் குறைவு |
| | | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 3.04 சதவீதம் அதிகம். |
| 3 | நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ள 62.5 கே.வி ஜெனரேட்டர் சர்வீஸ் மற்றும் பழுது நீக்கம் செய்து மீண்டும் பொருத்தி இயக்கி காண்பிக்கும் பணி. | ரூ.0.50 லட்சம் | திரு கே. ராஜகோபாலன் | 0.52 சதவீதம் குறைவு |
| | | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 2.46 சதவீதம் அதிகம். |
| 4 | மாமண்டூர் நிரேற்று நிலையத்தில் நீர்தேக்க தொட்டியிலிருந்து வெளியேற்றும் மோட்டாரின் 80 எச்.பி. திறன்கொண்டு, புதியதாக 100 எச்.பி திறன் கொண்ட ஸ்டார்டர் பொருத்தி இயக்கி காண்பித்தல் பணிக்கு | ரூ.1.96 லட்சம் | திரு கே. ராஜகோபாலன் | 0.58 சதவீதம் குறைவு |
| | | | திருவா அப்பல்லோ எண்டர்பிரைசஸ் | 0.58 சதவீதம் அதிகம். |

அலுவலக குறிப்பு–

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள ஒப்பந்தாரரின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்கலாம். மேற்படி பணியினை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் – 19

செங்கல்பட்டு நகராட்சியில் வருவாய் உதவியாளராக பணிபுரிந்து வந்த திரு ஜெ.வெங்கடேஷ் மற்றும் துப்புரவு ஆய்வர் திரு கே. பொற்செல்வன் என்பவர்கள் பணிக்கு பராமல் தன்னிச்சையாக விடுப்பு எடுத்து வருவதாலும் இவ்வலுவலக முலம் பல கடிதம் அனுப்பட்டு மேற்படி பணியாளரிடமிருந்து எவ்வித பதிலும் பெறப்படாமலும் இருந்ததால் 11.5.2018 அன்று மாலைமலர் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான விளம்பரக் கட்டணம் ரூ.5762/– வழங்க மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் பின்னேற்பு வழங்கலாம். (ந.க.எண்.88/2017/சி1)

பொருள் – 20

இந் நகராட்சிக்கு தேவையான 2018–19ம் ஆண்டிற்கு ஆண், பெண் துப்புரவு பணியாளர்களுக்கு சீருடை மற்றும் காலணிகள் வாங்க தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 26.7.2018 மற்றும் நகர மன்ற தீர்மானம் எண். 537 நாள் 31.7.2018ம் தேதிய அனுமதியின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 18.9.2018 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தபுள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | ஒரு ஜோடி ஆண்,பெண் சீருடை மற்றும் ஒரு ஜோடி காலணிக்கு வரப் பெற்ற விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | விஷால் ஏஜென்சிஸ், எண்.43, 3வது மெயின் ரோடு லெலின் நகர், அம்பத்தூர், சென்னை–53. | ரூ.1830/– |
| 2 | ஜி. ஜெ. ஏஜென்சிஸ், எண்.2, முதல் தெரு, ராம் நகர், காமராஜ் நகர், ஆவடி, சென்னை–71 | ரூ.1985/– |
| 3 | ஜி.கே. எண்டர்பிரைசஸ், 22/119, காத்தான் தெரு, செங்கல்பட்டு | ரூ.3850/– |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள விஷால் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அன்னாருக்கு பணி உத்திரவு வழங்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் – 21

இந் நகராட்சிக்குத் தேவையான 2018–19ம் ஆண்டிற்கான கீழ்கண்டுள்ள தளவாட சாமான்களை ரூ.6.50 இலட்சத்திற்கு துப்புரவு பணிக்கு வாங்க தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள் 26.7.2018 மற்றும் நகர மன்ற தீர்மானம் எண். 543 நாள் 31.7.2018ம் தேதிய அனுமதியின்படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 18.9.2018 அன்று வரப்பெற்ற மூன்று ஒப்பந்தபுள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | தளவாட பொருட்கள் விவரம் | ஒரு பொருளின் விலை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | தலைகவனம் | ரூ.542/– | 120 |
| 2 | கையுரை | ரூ.260/– | 150 |
| 3 | முக கவசம் | ரூ.42/– | 150 |
| 4 | காலுரை | ரூ.195/– | 50 |
| 5 | கத்தி | ரூ.531/– | 50 |
| 6 | கடப்பாறை | ரூ.708/– | 20 |
| 7 | மண்வெட்டி | ரூ.531/– | 30 |
| 8 | கரண்டி | ரூ.342/– | 100 |
| 9 | கூரை மற்றும் துடப்பம் (150+150) | ரூ.520/– | 300 |
| 10 | ஊக்கு | ரூ.431/– | 150 |
| 11 | ரெயின் கோட்டு | ரூ.945/– | 125 |
| 12 | ரிப்லெக்டர் ஜாகெட் | ரூ.330/– | 200 |
| 13 | சவுல் | ரூ.542/– | 30 |

| வ. எண். | ஒப்பந்ததாரர்கள் பெயர் | மொத்தம் 13 இனங்களுக்கு மட்டும் சேர்ந்த விலைப்புள்ளி |
|---|---|---|
| 1 | ஜி.கே. எண்டர்பிரைசஸ்,<br>22/119, காத்தான் தெரு, செங்கல்பட்டு | ரூ.6201/– |
| 2 | ஜி. ஜெ. ஏஜென்சிஸ், எண்.2, முதல் தெரு,<br>ராம் நகர், காமராஜ் நகர், ஆவடி, சென்னை–71 | ரூ.9049/– |
| 3 | விஷால் ஏஜென்சிஸ், எண்.43, 3வது மெயின் ரோடு<br>லெலின் நகர், அம்பத்தூர், சென்னை–53. | ரூ.8305/– |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தபுள்ளிகளில் வ.எண். 1ல் உள்ள ஜி.கே எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அதனை ஏற்று அன்னாருக்கு பணி உத்திரவு வழங்க மன்ற ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) அனுமதி அளிக்கலாம்.
2) அவசர அவசிய நிமித்தம் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலவலர் அவர்களின் முன் அனுமதிப் பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**பொருள் – 22**

இந் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 30 செங்கை ராயல் சிட்டி பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகளுக்கு குடிநீர் விநியோகம் செய்ய குடிநீர் பகிர்மானம் குழாய் அமைக்க தோராய செலவு ரூ.10.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து அனுமதிக்கலாம்.

**பொருள் – 23**

செங்கல்பட்டு நகராடசி அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணிக்காக டி.பி.சி. பணியாளர்கள் அமர்த்தப்பட்டு டெங்கு பணி முழுவீச்சில் நடந்து கொண்டிருக்கிறது. தற்போது டெங்கு கொசுப்புழுவை அழிக்கும் அபேட் (Abate Temephos ) மருந்து கையிருப்பு குறைவாக உள்ளதால் அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வாங்குவதற்கு (TNMSC ) தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

**பொருள் – 24**

செங்கல்பட்டு நகராட்சி அனைத்து வார்டுகளிலும் டெங்கு கொசு ஒழிப்பு பணி நடைபெறுவதால் மழைக்காலததில் கொசு ஒழிப்பதற்கு கொசு ஒழிப்பு புகை மருந்து ( Technical Malathion) அரசு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் (TNMSC ) மூலம் வாங்குவதற்கு தோராய செலவினம் ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 25

இந் நகராட்சியின் ஈப்பு வாகனம் வண்டி எண். டி.எண். 19 ஜெ. 3325 பழுதடைந்த நிலையில் உள்ளது. மேற்படி வாகனத்தின் பழுதினை சரி செய்து பயன்படுத்திக் கொள்ளவும், இதற்காகும் தோராய செலவினம் ரூ.20,000/– ஆகும். பழுதினை உடன் நீக்க உள்ளூர் மூன்று விலைப்புள்ளிகள் பெற்று நடவடிக்கை எடுக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி அளிக்கலாம்.

பொருள் – 26

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.20 முருகேசனார் தெருவில் சிறுமின்விசை பம்பின் பிளாஸ்டிக் தொட்டியை மாற்றியமைக்கவும், மின் இணைப்பை மாற்றவும் தோராய மதிப்பீடுத் தொகை ரூ.45,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 27

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.12 மலைப் பூங்கா பகுதியில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் சமுதாய கழிப்பிடம் கட்டும் பணிக்கு 12.1.2016 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு ரூ.7.16 இலட்சத்திற்கு சமுதாய கழிப்பிடம் கட்டப்பட்டுள்ள நிலையில் சமுதாயக் கழிப்பிடத்திற்கு அருகில் உள்ள மழைநீர் வடிகால்களில் திறந்த வெளியில் கழிப்பிடம் செய்வதை தவிர்க்கும் பொருட்டு Cover slab அமைக்கும் பணிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணி மேற்கொள்ளவும், மேலும் ஏற்கனவே பணி உத்திரவு வழங்கிய ஒப்பந்ததாரர் திரு எ. மோகன் ஒப்பந்ததாரர் மூலம் இந்த பணியை அதே ஒப்பந்தபுள்ளி விகிதத்தில் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

திட்டப்பணி என்பதாலும், பொது சுகாதாரப் பணியை கருத்தில் கொண்டு தூய்மை இந்தியா நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் – 28

2018–19ம் ஆண்டிற்கு செங்கல்பட்டு டுகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகிக்க பயன்படும் குடிநீர் பகிர்மான மற்றும் பிரதான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் கசிவு பணிகளுக்கு ரூ.9.90 இலட்சம் மதிப்பீட்டிற்கு 23.10.2018 அன்று பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பின்வருமாறு

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீட்டு தொகை | ஒப்பந்தாரர் பெயர் மற்றும் சதவீதம் |
|---|---|---|---|
| 1 | செங்கல்பட்டு நகராட்சிக்கு குடிநீர் விநியோகிக்க பயன்படும் குடிநீர் பகிர்மான மற்றும் பிரதான குழாய்கள் அடைப்பு மற்றும் கசிவு நீக்கும் பணிகள் | ரூ.9.90 லட்சம் | 1)திரு குமரன் எலெக்ட்ரிகல்ஸ் 0.02 சதவீதம் குறைவு<br>2) எஸ்.எம்.கே. எண்டர்பிரைசஸ் 0.013 சதவீதம் அதிகம். |

மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 29**

இந் நகராட்சிக்கு சொந்தமான குத்தகை இனம் தினசரி காய்கறி நாளங்காடியின் குத்தகைதாரர் திருமதி வி.என். கவிதா இந் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடர்ந்த வழக்கிற்கு இந் நகராட்சியின் சார்பாக அரசு வழக்கறிஞர் திரு டி. சீனிவாஸ் அவர்கள் வழக்காடி வருகிறார். 23.7.2018 ம் தேதியன்று மேற்படி வழக்கு குறித்த விசாரணையின் போது வக்காலத்து மற்றும் Affidavit தயார் செய்து இந் நகராட்சி சார்பாக நீதிமன்றத்தில் ஒப்புபடைப்பு செய்து வழக்காடிய தொகை ரூ.15,000/–த்திற்கு மன்றத்தின் அனமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

மேற்படி வழக்கு குறித்த அவசரம் அவசியம் கருதி அரச வழக்கறிஞர் உடனடி நடவடிக்கை மேற்கொள்வதால் மேற்படி தொகை வழங்க ஆணையர் மற்றும் தனி அலுவலர் முன் அனுமதி வழங்கலாம்.

**பொருள் – 30**

செங்கல்பட்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய பேருந்து நிலையம் எதிரில் அமைந்துள்ள தந்தை பெரியார் வணிக வளாக கட்டிடத்தின் அக்ணய பவன் சிற்றுண்டி பின்புறம் 1988ம் ஆண்டு கட்டப்பட்ட கட்டிடத்தில் நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம் இயங்கி வந்தது. மேற்படி கட்டிடம் 10.7.2010 ம் தேதயன்று தீ விபத்து ஏற்பட்டு கட்டிடம் சேதமடைந்தது. அதன்படி மேற்படி இயங்கி வந்த அலுவலகம் காலி செய்யப்பட்டது. மேற்படி தீ விபத்தினை தொடர்ந்து கட்டிடத்தின் மேற்கூரையின் சில இடங்களில் ரூப் சிலாப் இடிந்து விழுந்துள்ளது. மேலும் மேற்படி கட்டிடம் தற்போது பயன்பாட்டில் இல்லை. எனவே பாதுகாப்பற்ற நிலையில் உள்ள அக் கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த நகர மன்ற தீர்மானம் எண். 302 நாள் 28.12.2017ல் அனுமதி பெறப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டது. எனவே தற்போது காலிமனையாக உள்ள மேற்படி இடத்தின் அருகாமையில் தொடர் வண்டி இரயில் நிலையம் அமைந்துள்ளதால் அங்கு வந்து செல்லும்

பயணிகளின் வாகனங்கள் பெருமளவில் வந்து செல்வதால் மேற்படி வாகனங்கள் நிறுத்துமிடமாக மாற்றம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) மேற்படி இடத்தினை வாகனங்கள் நிறுத்தும் இடமாக பாவித்து அதனை ஆண்டு குத்தகை இனமாக கொண்டு சென்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி நடத்தி அதில் உயர்ந்தபட்ச தொகை கோரும் ஒப்பந்ததாரருக்கு ஆண்டு குத்தகை தொகை நிர்ணயம் செய்து கொள்ளவும் அனுமதி வேண்டப்படுகிறது.

2) மேலும் மேற்படி வாகனங்கள் நிறுத்துமிடத்தில் 1) சிற்றுந்து (கார்) நிறுத்துவதற்கு ஒரு நாளைக்கு கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்கவும் 2) இரு சக்கர மோட்டார் வாகனங்கள் (மோட்டார் பைக்) நிறுத்துவதற்கு ஒரு நாளைக்கு கட்டணம் நிண்ாயம் செய்து வசூலிக்கவும்.

3) மிதிவண்டி (சைக்கிள்) நிறுத்துவதற்கு ஒரு நாளைக்கு கட்டணம் நிர்ணயம் செய்து வசூலிக்கவும் வருவாய் ஆய்வர் குறிப்பின்படி கீழ்கண்டுள்ள பட்டியலின்படி மேற்படி வண்டிகளுக்கு மாதாந்திர கட்டணம் அடிப்படையில் நிர்ணயம் செய்ய மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வாகனத்தின் வகை | 12 மணி நேர கட்டணம் | ஒரு மாதத்திற்கான கட்டணம் |
|---|---|---|---|
| 1 | சிற்றுந்து (கார் ) | ரூ.25/– | ரூ.750/– |
| 2 | இருசக்கர வாகனம் (மோட்டார் பைக்) | ரூ.10/– | ரூ.300/– |
| 3 | மிதிவண்டி (சைக்கிள்) | ரூ.5/– | ரூ.125/– |

மேற்கண்ட பொருளிற்கான விளம்பர செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

ஒரு நாளைக்கு கட்டணம் நிர்ணயம் செய்து மன்றம் ஒப்புதல் அளிக்கலாம். (ந.க.எண்.1235/2018/இ1)

தனி அலுவலர்,
செங்கல்பட்டு நகராட்சி.